மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாழ்வார்மங்கலம் கிராமத்திலே ஏரி அமைக்கின்ற பணியை இந்த ஆண்டு எடுத்துக்கொள்வதற்காகப் பரிசீலித்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் இந்த தேவர்மலை கிராமத்தின் குறுக்கே புதிதாக கட்டுகின்ற அந்த ஏரிக்கு விகிதாசாரம் குறைவாக இருக்கின்ற காரணத்தினாலே நில நிர்வாக ஆணையாளர் அவர்கள் 'தி பெனிபெட் காஸ்ட் ரேஷியோ' என்று சொல்லப்படுகின்ற அந்த விகிதாசாரம் குறைவாக இருக்கிறது என்று கருத்து தெரிவித்து, அதை புஞ்சை ஆயக்கட்டிலே சேர்த்து மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று மறுபடியும் நம்முடைய துறையின் மூலம் திருப்பி அனுப்பியிருக்கிறோம். ஆக இந்தப்பணி கொஞ்சம் காலதாமதம் ஆகலாம். அந்த ஒப்புதலைப் பெற்றபின்னாலே தான் அதை அறிவிக்கமுடியும். ஆகவே இரண்டாவது பணி கொஞ்சம் காலதாமதம் ஆகலாம். முதல் பணி இந்த ஆண்டு செய்வதற்கான பரிசீலனையில் இந்த அரசு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 289 திரு. கி. தருமலிங்கம், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்

289—

வேளாண்மைக்கு வழங்கப்படும் இலவச மின்சாரம்.

*10283—திரு. கி. தருமலிங்கம்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —:

(அ) வேளாண்மைக்குத் தற்பொழுது இலவசமாக வழங்கப்படும் மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 1—8—1990 முதல் அனைத்து விவசாயிகளுக்கும் தொடர்ந்து இலவச மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

திரு. கி. தருமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் இந்த நல்லதொரு பதிலை அமைச்சர் பெருமகனார் அளித்ததற்கு விவசாய மக்களின் சார்பாக நான் நன்றியறிதலைத் தெரிவித்துக்

1993 ஏப்ரல் 8]

கொண்டு இந்த நாள் ஒரு பொன்னான வரலாற்றுச் சிறப்புமிக்க நாள். அந்த வரலாற்றிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த பதில் எழுதப்படும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ச. காந்திராஜன்.

திரு. ச. காந்திராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் நம்முடைய மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரசிம்மராவ் அவர்கள் அனைத்து இலவச திட்டங்களையும் ரத்து செய்யவேண்டும் என்று சொல்லி வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையைப் பத்திரிகையிலே பார்த்தேன். எனவே அந்த வகையிலே இலவச மின்சாரமும் ரத்து செய்ய வேண்டும் என்று சொல்லியிருப்பதாக அறிந்தேன். எனவே அப்படி மத்திய அரசு ஒரு நடவடிக்கையை எடுக்கிறபோது, நம்முடைய மாநில அரசாங்கம் இது சம்பந்தமாக மத்திய அரசுக்கு இலவச மின்சாரத்தைத் தொடர்ந்து வழங்குவதற்கு வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

மான்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மைய அரசைப் பொறுத்தமட்டில் டெல்லியில் நடக்கின்ற அமைச்சர்கள் மாநாட்டுக்குச் செல்கின்ற நேரத்திலே எல்லாம் ஒரு யூனிட்டுக்கு 50 பைசா போடவேண்டுமென்று வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். 27—8—1992 நாளிட்ட கடிதத்தில்கூட மைய அரசிலேயிருந்து முதலமைச்சருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அவர்கள் தொடர்ந்து இலவச மின்சாரம் வழங்குவதிலே அவர்களுக்கு உடன்பாடு இல்லை என்பதைத்தான் பல்வேறு கட்டங்களிலே தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நான் ஏற்கனவே பலமுறை தெரிவித்திருக்கிறேன். இந்த முடிவு பற்றி நாம் ஆழ்ந்து பரிசீலிக்க வேண்டியிருக்கின்ற காரணத்தினால்தான் விவசாய சங்க பிரதிநிதிகளை எல்லாம் அழைத்து நானும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் பல்வேறு கட்டங்களிலே இன்றைக்கு முதல் கட்ட பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறோம், கருத்துக்களைச் சொல்லியிருக்கிறோம். இருக்கின்ற இடர்பாடுகளை, இந்த அரசுக்கு இருக்கின்ற நெருக்கடிகளை, மத்திய அரசு கொடுக்கின்ற அந்த ஆலோசனைகளை எல்லாம், அவர்கள் தெரிவிக்கின்ற கருத்துக்களை எல்லாம் அவர்களிடத்திலே சொல்லியிருக்கிறோம். ஆகவே, தொடர்ந்து மத்திய அரசு ஒரு யூனிட்டுக்கு 50 பைசா போட வேண்டுமென்றுதான் வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதுதான் இன்றைக்கு இருக்கின்ற நிலைமை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1993 ஏப்ரல் 8

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலேதான் ஆழ் துளை கிணறுகள், ஏர் கம்ப்ரசர் பாசன முறை என்று மின் சாரத்தை அதிகமாகப் பயன்படுத்துகிற பாசன முறையும் அதிகமான நீர்ப்பாசன பம்ப் செட்டுகளும் இருக்கின்றன என்ற உண்மையை மத்திய அரசு அறியுமா? அதை மத்திய அரசுக்குத் தெரிவித்து, இந்த இலவச மின்சாரம் தமிழகத் தைப் பொறுத்தவரையிலே நிரந்தரமாக தொடரவேண்டிய திட்டம் என்பதை மத்திய அரசுக்கு தமிழக அரசு எடுத்துச் சொல்லுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி தெரிவித்த கருத்துக்களை எல்லாம் ஒன்று அல்ல இரண்டு அல்ல பல்வேறு காலக் கட்டங்களிலே நம்முடைய அரசு மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறது. டெல்லியிலே நடக்கின்ற மின்சாரத்துறை அமைச்சர்கள் மாநாட்டிலேகூட இந்தக் கருத்துக்கள் எல்லாம் வலியுறுத்தப்பட்டிருக்கின்றன. இங்கு இருக்கின்ற பிரச்சினைகளையும், மற்ற மாநிலங் களில் இருக்கின்ற பிரச்சினைகளை எல்லாம் மிகத் தெளி வாக இந்த அரசு எடுத்து வைத்திருக்கிறது. இருப்பினும், இன்றைக்கு மின்சார வாரியத்தைப் பொறுத்தமட்டிலே, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். வருடாவருடம் நாம் இலவச மின்சாரம் கொடுத்துக்கொண்டு போகின்றபொழுது வருடா வருடம் அதிலே நஷ்டம் கூடிக் கொண்டே போகிறது. வருஷத்துக்கு 40 ஆயிரம் பம்ப் செட்டுகளுக்கு கொடுக்கிறோம் என்றால், அடுத்த வருஷம் கூட 40 ஆயிரம் பம்ப் செட்டுகள் வருகின்றன. உற்பத்திச் செலவு இன்றைக்குக் கூடியிருக்கிறது. நிலக்கரி விலை, போக்குவரத்துச் செலவு இவைகளை எல்லாம் பார்க்கின்ற பொழுது மிகப் பெரிய நஷ்டத்தை மின்சார வாரியம் தாங்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தாலே தான் இந்தப் பிரச்சினை மாநில அரசுக்குக்கூட சவாலாகத் தான் இருக்கிறது. இருந்தாலும், ஏழை விவசாயிகளுடைய நலன் கருதி நம்முடைய மாண்புமிகு இதயத் தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் அதை எல்லாம் இன்றைக்கு மனதிலே, கருத்திலே கொண்டுதான், இன்றைக்கு இலவச மின்சாரத்தை வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே, மத்திய அரசு இன்றைக்கு அவர்களுடைய கருத்தாக அதைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அதைப்பற்றி இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை. ஆகவே அவர்கள் அதைத் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக் கிறார்கள் என்பதை மாத்திரம் நான் தெரிவித்துக் கொள் கிறேன்.

1993 ஏப்ரல் 8]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நமது நாட்டில் இலவச மின்சாரம் ரத்து செய்யப்பட மாட்டாது என்று சொன்னார்கள். விவசாயிகளுடைய நெஞ்சங்களில் எல்லாம் நிறைவான மகிழ்ச்சியை தருகின்ற அளவுக்கு புரட்சித் தலைவியினுடைய ஆட்சி இலவச மின்சாரத்தை ரத்து செய்யாது என்று சொன்னார்கள். இந்த மின்சாரத்தை தயாரிப்பதற்கு நிலக்கரி வட நாட்டிலிருந்து வாங்க வேண்டியிருக்கிறது. மத்திய சர்க்கார் 50 பைசா யூனிட்டுக்கு போடுங்கள் என்று சொல்கின்றபொழுதே, நாங்கள் இலவசமாக மின்சாரம் தந்து வருகிறோம். ஆகவே, நீங்கள் வட நாட்டிலிருந்து நிலக்கரியை வாங்குவதால் அதிக செலவு ஆகிறது, மின்சாரம் தயாரிக்க. பக்கத்திலே இருக்கிற ஆந்திராவில் இருந்து நிலக்கரியை வாங்குவதற்கு மத்திய அரசிடமிருந்து எழுதி, அதற்கு அனுமதியைப் பெற்று இலவச மின்சாரம் தயாரிக்க அரசு முன்வருமா? என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பக்கத்திலே இருக்கிற மாநிலத்திலே அவர்கள் மாநிலத்திற்குத் தேவையான நிலக்கரியை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கேயும் அனல் மின் நிலையங்கள் இருக்கின்றன. வட மாநிலங்களிலே இருந்து வருகின்ற நிலக்கரியைக் காட்டிலும் சிங்கரேணி மற்ற இடங்களிலிருந்து வருகிற நிலக்கரி சற்று தரம் குறைவாகவும் இருக்கலாம். ஆகவே, அதுபற்றி நாம் வலியுறுத்த முடியாது. நாம் கேட்கலாம், பக்கத்து மாநிலங்களிலிருந்து தர வேண்டுமென்று கேட்கலாம். நமக்குத் தேவைப்படுகின்ற அளவுக்கு முழுவதும் அவர்கள் கொடுத்துவிட முடியாது. ஏன் என்றால் நமக்கு வருடத்திற்கு—இந்த வருடம் 10 லட்சம் டன் தேவைப்படுகிறது என்று சொன்னால் அடுத்த ஆண்டு புதிய திட்டங்கள் வருகின்றன. 12 லட்சம், 15 லட்சம் என்று உயர்ந்துகொண்டே போகிறது. அத்தனைத் தேவைகளையும் நம்முடைய அண்டை மாநிலத்திலிருந்து பூர்த்தி செய்துவிட முடியாது. வட மாநிலங்களிலிருந்து தான் கொண்டுவர வேண்டும். அதுவும் போதவில்லை என்ற காரணத்தினாலே தான் இன்றைக்கு வெளி நாடுகளிலிருந்து எல்லாம் அதிக 'கலோரி பிட்'வேல்யூ கொண்ட, கொஞ்சம் விலை குறைவாக, நமக்கு போர்டுக்கு லாபம் வருகின்ற அளவுக்கு இருக்கிற அளவுக்கு இன்றைக்கு இறக்குமதிகள் எல்லாம் செய்ய இருக்கின்றோம் ஆகவே, குறிப்பிட்ட அண்டை மாநிலத்திலிருந்து மாத்திரம் நம்முடைய தேவையைப் பூர்த்தி செய்துவிட முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1993 ஏப்ரல் 8

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ம. சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இலவச மின்சாரம் என்பது எல். டி. லைன் வைத்திருக்கிற விவசாயிகளுக்கு மாத்திரம்தான் இப்பொழுது பயன்படுகிறது. சில கூட்டுறவு நீர் ஏற்று பாசன சங்கம் வைத்திருக்கிற விவசாயிகளுக்கு எச். டி. லைனிலிருந்து மின்சாரம் வழங்கப்படுகிறது. அவர்களுக்கு இந்த இலவச மின்சார சலுகை கிடைப்பதில்லை. அதிலேயும் சிறு, குறு விவசாயிகள் இருக்கிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள், அவர்களையும் சேர்த்து எல்லோருக்கும் இலவச மின்சாரம் வழங்க ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்பொழுது இருக்கின்ற நடைமுறையிலே, 650, 700 கோடி ரூபாய், என்று நஷ்டத்தை நாம் தாங்கிக் கொண்டிருக்கிறோம். இதுபோன்ற பல்வேறு திட்டங்களை, மற்ற சலுகைகளை கொடுப்பதிலே இந்த அரசுக்கு உடன்பாடு கிடையாது. இந்தச் சலுகைகள் வேறு எதற்கும் தரப்பட மாட்டாது. இருக்கின்ற நிலையைத் தொடர்ந்து நடத்துவதிலே பல்வேறு சங்கடங்களை இந்த அரசு சந்தித்துக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண். 290, திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

290—

திருத்தணி அருகில் கந்தியாற்றின் குறுக்கே மேம்பாலம்.

*10468—திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும்: வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி அருகில் ஓடும் கந்தியாற்றின் குறுக்கே சென்னை சாலையில் மேம்பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் பணி துவங்கிட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது திட்டம் எதுவும் இல்லை.